TNRM100035232024



**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**
**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026 ம் வருடம் ஏப்ரல் மாதம் 06 ம் நாள் திங்கட்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.153/2024**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கடலாடி காவல் நிலைய குற்ற எண்.72/2024. |
| **எதிரியின் விபரம்** | | |
| 2. | பெயர் | கணேசன் |
| 3. | தகப்பனார்/கணவர் பெயர் | ராஜ முனியாண்டி |
| 4. | வயது | 61/2024 |
| 5. | தொழில் | விவசாயம் |
| 6. | முகவரி | அரியநாதபுரம், ஆப்பனூர், கடலாடி தாலுகா. |
| 7. | சம்பவ நாள் | 27.06.2024 ம் தேதி 21.00 மணி |
| 8. | புகார் தேதி | 28.06.2024 ம் தேதி 06.30 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 28.06.2024 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 03.07.2024 |
| 11. | கமிட்டல் உத்தரவு | இல்லை |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 08.10.2024 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 12.12.2024 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் |

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.06 14:57:26 +0530

| | | |
|---|---|---|
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | - |
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சிகள் / முதல் விசாரணை / குறுக்கு விசாரணை<br>அ.சா.1 / 23.03.2026 / 23.03.2026<br>அ.சா.2 / 23.03.2026 / 23.03.2026<br>அ.சா.3 / 23.03.2026 / 23.03.2026<br>அ.சா.4 / 25.03.2026 / 25.03.2026 |
| 17. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1) (ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 01.04.2026 |
| 18. | எதிரி தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 19. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச பிரிவின் படியான மனுக்கள் | M.P.No.02/2026 Petition U/s.320 Cr.P.C. filed and dismissed on 23.03.2026. |
| 20. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.S.சொக்கேசன் |
| 21. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.சத்தியமூர்த்தி |
| 22. | எதிரியின் கூற்று | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 23. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 06.04.2026 |
| 24. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 06.04.2026 |
| 25. | தீர்ப்பின் முடிவு | முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக எதிரி |

| | | |
|---|---|---|
| | | இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்குச்சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக 01.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை - 1 திரு.S.சொக்கேசன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.சத்தியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இந்நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

## தீர்ப்புரை

1. இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

2. வழக்கில் புகார்தாரரின் மனைவியானவர் கடந்த 27.06.2024ம் தேதி மாலை கடலாடி காவல் நிலையத்தில் தன் மீது புகார் கொடுத்ததை மனதில் வைத்துக்கொண்டு இரவு சுமார் 09.00 மணியளவில் புகார்தாரர் தனது மாமனார்



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.06 14:57:31 +0530

வீட்டிற்கு சென்று வீட்டின் முன் சாப்பிட்டு கொண்டிருந்த தன் மனைவியிடம் பிரச்சனையை ஊர்லேயே பேசி முடிச்சாச்சுல எதுக்கு என்னை போலீஸ் ஸ்டேசனுக்கு வரவெச்சே என்று கேட்டதற்கு புகார்தாரரின் மனைவி அப்படித்தான் பன்னுவோம் என்ன செய்வே என்று சொன்னவுடன் புகார்தாரருக்கும், அவரது மனைவிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டவுடன் வீட்டிற்குள் இருந்த எதிரி கையில் அருவாளை எடுத்து வந்து ஏண்டா சுன்னி மகனே என் மகளையும் வெச்சு ஒழுங்கா வாழ மாட்டேங்குற இங்க வந்து என் மகளை அடிக்கவும் செய்றே என்று சொல்லி புகார்தாரரை ஓங்கி பின்பக்க தலையில் வெட்டி சிறுகாயத்தை ஏற்படுத்தியும், புகார்தாரரைப் பார்த்து இனிமேல் தன் வீட்டு பக்கம் வந்தே உன்னை வெட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று அருவாளை காட்டி கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)-ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது 08.10.2024ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரி பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி ஆஜரானதன் பேரில் கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் குற்றப்பத்திரிக்கை மற்றும் வழக்கின் நகல்கள் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் 12.12.2024ம் தேதியன்று எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி குற்றம்



SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.06 14:57:36 +0530

புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு 240(1)ன் கீழ் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் படி எதிரிக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரி தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு 242-ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் மொத்தம் 9 சாட்சிகள் பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளது. வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆகவும், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி அ.சா.2 ஆகவும், பார்வை மகஜர் சாட்சி அ.சா.3 ஆகவும், கூடுதல் சாட்சியாக நிலைய சார்பு ஆய்வாளர் அ.சா.4 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். மற்ற சம்பவ சாட்சிகள், மற்றொரு பார்வை மகஜர் சாட்சி, புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள். அரசுத் தரப்பில் அ.சா.ஆ.1 முதல் 7 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பில் சான்றுப் பொருள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.06 14:57:40 +0530

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு : அ.சா.1 தனது சாட்சியத்தில், 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் அ.சா.1 அவரது வீட்டின் வெளியே இரவு வேலையில் நின்று கொண்டிருந்தபோது சிலர் எனது வீட்டின் முன்பு சண்டை போட்டுக்கொண்டிருந்ததாகவும், அருகே சென்று பார்த்தபோது யாரோ கீழே தள்ளி விட்டதாகவும், சம்பவம் குறித்து கடலாடி காவல் நிலையத்தில் தெரிவித்தபோது எழுதப்படாத வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் பெற்றதாகவும், என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் (அ.சா.ஆ.1) தன்னுடையது என சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.2 தனது சாட்சியத்தில், வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும், போலீசார் விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.3 தனது சாட்சியத்தில், பார்வை மகஜரில் உள்ள கையொப்பங்கள் எதுவும் அவருடையது அல்ல என சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த 28.06.2024 ம் தேதி அதிகாலை 02.00 மணிக்கு கடலாடி காவல் நிலைய சார்பு ஆய்வாளராக திரு.ராமச்சந்திரன் பொறுப்பில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஆப்பனூர் அரியநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த செல்லமுத்து, த/பெ.முனியாண்டி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலம் (அ.சா.ஆ.2) பெற்று நிலையக் குற்ற எண்.72/2024 இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)-ன் கீழ் முதல்


SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.06 14:57:43 +0530

தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்துள்ளதாகவும், அன்றைய தினமே காலை 08.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செந்தூர்லிங்கம் மற்றும் சண்முகவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சா.ஆ.4) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்துள்ளதாகவும், பட்டியல் சாட்சிகளான செல்லமுத்து, முத்துராமலிங்கம், அய்யப்பன், முருகவேல், முத்துராமலிங்கம், த/பெ.பழனி, செந்தூர்லிங்கம், சண்முகவேல் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், இந்த வழக்கின் எதிரியை 28.06.2024ம் தேதி 11.00 மணிக்கு தெற்கு கொட்டகை விலக்கு ரோட்டில வைத்து உச்ச நீதிமன்ற கட்டளையை பின்பற்றி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளதாகவும், வழக்கில் காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சை அளித்த இராமநாதபுரம் அரசு மருத்துவர் திரு.ஜெயச்சந்திரன் என்பவரை விசாரித்து அவர் அ.சா.1க்கு அளித்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழை பெற்று அவரது வாக்குமூலத்தை பதிவு செய்து செய்துள்ளார் என்றும், மருத்துவர் அ.சா.1க்கு அளித்த காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 என்றும், மேற்படி மருத்துவர் அ.சா.1க்கு தனியாக அளித்த காயச்சான்று நகல் அ.சா.ஆ.7 என்றும், மருத்துவர் அ.சா.1க்கு ஏற்பட்ட காயத்தின் தன்மைக்கு சிறுகாயம் என்று குறிப்பிட்டுள்ளதாகவும், பின்பு இந்த வழக்கில் இறுதியாக புலன் விசாரணை முடித்து எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் பிரிவுகள் 294(b), 324, 506(ii)-ன் கீழ் எதிரி மீது குற்ற இறுதியறிக்கையை 23.07.2024ம் தேதி தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.06 14:57:48 +0530

9. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)ன் கீழ் 01.04.2026ம் தேதியன்று வினவியபோது, அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

10. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் போதுமான சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் தகுநிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

## தீர்வு

11. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் 7 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது அ.சா.1ம், எதிரியும் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும், அரசுத் தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதாலும், அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதம் செய்தார்.

12. இவ்வழக்கில் அ.சா.1 ம், எதிரியும் பெரியோர் முன்னிலையில் சமாதானமாகி விட்டதாக கு.வி.மு.ச. பிரிவு 320(2)-ன் கீழ் மனு தாக்கல் செய்து அ.சா.1 முதல் அ.சா.3 ஆகிய சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி அரசுத் தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 முதல் அ.சா.4 தவிர இதர சாட்சிகள் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள்.

13. அ.சா.4 ஆவணங்களின் அடிப்படையில் அளித்த சாட்சியம் மற்றும் அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, வழக்கில் புகார்தாரரின் மனைவியானவர் கடந்த 27.06.2024 ம் தேதி மாலை கடலாடி காவல் நிலையத்தில் தன் மீது புகார் கொடுத்ததை மனதில் வைத்துக்கொண்டு இரவு சுமார் 09.00 மணியளவில் புகார்தாரர் தனது மாமனார் வீட்டிற்கு சென்று வீட்டின் முன் சாப்பிட்டு கொண்டிருந்த தன் மனைவியிடம் பிரச்சனையை ஊர்லேயே பேசி முடிச்சாச்சுல எதுக்கு என்னை போலீஸ் ஸ்டேசனுக்கு வரவெச்சே என்று கேட்டதற்கு புகார்தாரரின் மனைவி அப்படித்தான் பன்னுவோம் என்ன செய்வே என்று சொன்னவுடன் புகார்தாரருக்கும், அவரது மனைவிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டவுடன் வீட்டிற்குள் இருந்த எதிரி கையில் அருவாளை எடுத்து வந்து ஏண்டா சுன்னி மகனே என் மகளையும் வெச்சு ஒழுங்கா வாழ மாட்டேங்குற இங்க வந்து என் மகளை அடிக்கவும் செய்றே என்று சொல்லி புகார்தாரரை ஓங்கி பின்பக்க தலையில் வெட்டி சிறுகாயத்தை ஏற்படுத்தியும், புகார்தாரரைப் பார்த்து இனிமேல் தன் வீட்டு பக்கம் வந்தே உன்னை வெட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று அருவாளை காட்டி கொலை



SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.06 14:57:54 +0530

மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார்தாரரால் புகார் வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது.

14. சம்பவம் குறித்து அ.சா.1 புகார் வாக்குமூலம் (அ.சா.ஆ.2) அளித்த போதிலும் தற்போது எதிரியுடன் சமாதானம் செய்து கொண்டு, 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் அ.சா.1 அவரது வீட்டின் வெளியே இரவு வேலையில் நின்று கொண்டிருந்தபோது சிலர் எனது வீட்டின் முன்பு சண்டை போட்டுக்கொண்டிருந்ததாகவும், அருகே சென்று பார்த்தபோது யாரோ கீழே தள்ளி விட்டதாகவும், சம்பவம் குறித்து கடலாடி காவல் நிலையத்தில் தெரிவித்தபோது எழுதப்படாத வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி சாட்சியை அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்த போதிலும் அவரது சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என்பதால் மேற்படி சாட்சியின் சாட்சியத்தின் தன்மை நிலையான நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும் விதமாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பிற்கு முரண்பட்டு காணப்படுவதால் அ.சா.1 அளித்த புகார் வாக்குமூலம் மற்றும் அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் எழுகிறது. அ.சா.1 முதல் அ.சா.4 தவிர மற்ற சம்பவ சாட்சிகள், மற்றொரு பார்வை மகஜர் சாட்சி, புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் விசாரணை செய்யப்படவில்லை. கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட நிலைய சார்பு ஆய்வாளர் அளித்த சாட்சியத்தை மட்டும்

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.06 14:58:04 +0530

அடிப்படையாகக் கொண்டு எதிரிதான் இவ்வழக்கின் குற்றத்தை செய்தார் என்று அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டதாக முடிவு காண இயலாது. எனவே மேற்படி சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி அரசுத் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

16. முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

17. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்குச்சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

18. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர்,



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.06 14:58:09 +0530

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ம் தேதி திங்கட்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.06 14:58:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:-**

| அ.த.சா. | அரசுத்தரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | செல்லமுத்து (புகார்தாரர்) |
| அ.சா.2 | முத்துராமலிங்கம் (சம்பவ சாட்சி) |
| அ.சா.3 | சண்முகவேல் (பார்வை மகஜர் சாட்சி) |
| அ.சா.4 | நாகராஜன் (நிலைய சார்பு ஆய்வாளர்) |

**அரசுத்தரப்பு சான்று ஆவணங்கள் விபரம்:-**

| | | |
|---|---|---|
| Ex.P.1 | 28.06.2024 | புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் |
| Ex.P.2 | 28.06.2024 | புகார் வாக்குமூலம் |
| Ex.P.3 | 28.06.2024 | முதல் தகவல் அறிக்கை |
| Ex.P.4 | 28.06.2024 | பார்வை மகஜர் |
| Ex.P.5 | 28.06.2024 | மாதிரி வரைபடம் |
| Ex.P.6 | 17.07.2024 | காயச்சான்றுடன் கூடிய விபத்துப்பதிவேடு |
| Ex.P.7 | 17.07.2024 | காயச்சான்று நகல் |

அரசு தரப்பு சான்று பொருள் :- இல்லை.

எதிரி தரப்பு சாட்சிகள் :- இல்லை

எதிரி தரப்பு சான்றாவணம் :- இல்லை

எதிரி தரப்பு சான்று பொருள் :- இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.06 14:58:15 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

குறிப்பு:-

1. சாட்சிகளின் விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து குற்றமுறையீட்டாளர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.